பக்கங்கள்:-21

# காலை முரசு


## பாதாளக் குழுக்களை தீர்த்துக் கட்டுவோம்!

### புதிய பொலிஸ்மா அதிபர் சபதம்

பாதாளக் குழுக்களுக்கு அடியோடு முடிவு கட்டுவோம் என்று புதிய பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 31 | சனிக்கிழமை | 16.08.2025 | அதிர்வு 15

### அரசுக்குள் குழப்பம் என்று கூறி வதந்தியைப் பரப்பாதீர்கள்

# இந்த அரசாங்கத்தை எந்தச் சக்தியாலும் அசைக்கவே முடியாது!

### எதிர்க்கட்சிகளுக்குப் பிரதமர் ஹரிணி சாட்டையடி

**"தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசுக்குள் குழப்பம் என்று வதந்திகளைப் பரப்பி ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிர்க் கட்சிகள் கனவு காணக்கூடாது. நாட்டு மக் களின் அமோக ஆணையைப் பெற்ற இந்த அரசை எந்தச் சக்தியாலும் அசைக்கவே முடியாது."**

**- இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.** 06



## கொழும்பில் இந்தியச் சுதந்திர தின நிகழ்வு



இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் கொழும் பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி, இந்திய தேசிய இராணுவத்தின் தியாகங்களை நினைவுகூர்ந்து கொழும்பிலுள்ள நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்ச்சியில், இந்திய ஜனாதிபதியின் சுதந்திர தின முன்னோடி உரையின் பகுதிகளை இந்தியத் தூதுவர் வாசித்தார்.

சுவாமி விவேகானந்தர் கலாசார மையத்தின் மாண வர்கள் தேசபக்தி நிகழ்ச்சிகளை வழங்கினர். இலங் கைக் கடற்படை இசைக் குழுவினர் தேசபக்தி பாடல் களை இசைத்து நிகழ்வுக்குப் பெருமை சேர்த்தனர்.

யாழ்ப்பாணம், கண்டி, 06




'செம்மணிப் புதைகுழி அகழ்வில் வெளி நாட்டு நிபுணத்துவ சேவை; சுமந்திரனின் சட்ட வாத்தை அடுத்து யாழ்ப்பாணம் நீதிமன்றம் பரிசீலனை' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் 'மாலை முரசு' இதழில் யாழ்ப்பாணம் நீதிமன்ற விசாரணை பற்றிய செய்தி வெளியானமையை அடுத்து சில தரப்புக்களில் பரபரப்பும் குழப்பமும் ஏற்பட்டிருக்கின்றன.

கொழும்பிலிருந்து சில ஊடகத் தரப்புக்களும் அது பற்றிக் கரிசனை கொடுத்து விசாரிக்கத் தொடங்கி இருக்கின்றன.

பரபரப்புக்கு வேறு ஒன்றும் காரணம் அல்ல. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து நீதி முறையான விசாரணை நடத்தி, குற்றம் இழைத்தவர்களைச் சட்டத்துக்கு முன் நிறுத்தி, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, உண்மைகளை அம்பலப்படுத்தும் நடவடிக்கையில் 06

# ஜனாதிபதியைச் சந்தித்த புதிய பொலிஸ்மா அதிபர்

புதிய பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய, நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு ஜனாதிபதிக்கு அவர் நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய இலங்கைப்பொலிஸின்37ஆவதுபொலிஸ்மா அதிபர் ஆவார். இலங்கை பொலிஸ் சேவையில் கான்ஸ்டபிள், சப் - இன்ஸ்பெக்டர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய மூன்று நிலைகளையும் கடந்து பொலிஸ்மா அதிபர் பதவிக்குத் தெரிவான முதலாவது பொலிஸ்மா அதிபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியே தீருவோம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய போராட்டத்தை நாம் கைவிடவில்லை. இது தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.”

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வரவு - செலவுத் திட்டத்திலும் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



எமது நாட்டில் பெருமளவான தனியார் ஊழியர்களும் உள்ளனர். அவர்களுக்கு அடிப்படை சம்பளம் நெடுநாட்களாக அதிகரிக்கப்படவில்லை. இந்தத் தொகையை நாம் அதிகரித்துள்ளோம். அடுத்த வருடமும் அதிகரிப்பு இடம்பெறும்.

எனினும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுதான் சவாலாக உள்ளது. அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் சம்பளம் போதாது.

இந்தக் காலப் பகுதியில் தோட்ட நிர்வாகம் இலாபம் ஈட்டியுள்ளன. எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பெருந்தோட்ட அமைச்சு, நிதி அமைச்சு என்பன உரிய தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன.

சம்பள உயர்வை விரைந்து பெற்றுக் கொடுக்க முடியாமை தொடர்பில் கவலையடைகின்றோம். எனினும், நாம் அதற்குரிய போராட்டத்தைக் கைவிடவில்லை. நிச்சயம் உறுதிமொழியை நிறைவேற்றுவோம். அடுத்த சில மாதங்களில் இந்தப் பிரச்சினை தீரும்.” – என்றார்.

# குற்றச் செயல்களுக்கு முடிவு கட்ட புதிய சட்டம் கட்டாயம் வேண்டும்!

## பொலிஸ்மா அதிபர் பிரியந்த வலியுறுத்து



“குற்றச் செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்ட ஏற்பாடுகள் மிகவும் அவசியம்.”

– இவ்வாறு புதிய பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தலைமறைவாகி இருந்த 11 குற்றவாளிகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களைத் தடுக்கும், குற்றக் குழுக்களை ஒடுக்கும் வேலைத் திட்டத்தைத் தற்போதுள்ள சாதாரண சட்டத்தின் பிரகாரம் முழுமையாக முன்னெடுக்க முடியாது. இது பற்றி ஜனாதிபதி, நீதி அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இதற்கமைய தேவையான புதிய சட்ட ஏற்பாடுகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. சர்வதேசத்தின் நன்மதிப்பை இலங்கை பொலிஸ் பெற்றுள்ளது.

அதேவேளை, நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களைத் தடுப்பதற்குரிய வேலைத்திட்டம் செயற்படுகின்றது. சட்டத்தில் சிற்சில குறைபாடுகள் உள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் நாம் தற்போது கைவைப்பதில்லை.

இவ்வாறு சட்ட ரீதியாக உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். போதைப் பொருள் மாபியாக்களின் பிடிக்குள் சிக்கிய பொலிஸ் அதிகாரிகள் சேவையில் இருந்து நீக்கப்படுவார்கள். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் நடந்தன என்பதை அரசு உள்ளிட்ட அனைத்து தரப்புகளும் ஏற்க வேண்டும்

## கொழும்பில் ‘செம்மணி’ நூல் வெளியீட்டு விழாவில் சாலிய பீரிஸ் வலியுறுத்து




“இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் வலியுறுத்தினார்.

சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவரகெதர மற்றும் எம்.எப்.எம்.பஸீர் ஆகியோர் எழுதிய “செம்மணி” எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து “இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் மனிதப் புதைகுழிகள்” எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தால் கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் கூறியதாவது:–

“2018 ஆம் ஆண்டு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு வருட காலம் அதன் தவிசாளராகப் பணியாற்றினேன். அவ்வேளையில் அலுவலகத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால், நாம் சென்று பார்த்தபோது எமக்கான அலுவலகம் கூட இருக்கவில்லை. எனவே, எவ்வாறிருப்பினும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அவசியமான வளங்கள் மற்றும் வசதிகள் இல்லாமலும், தீர்வு காண வேண்டும் என்ற உண்மையான அரசியல் தன்முனைப்பின்றியும் எதனையும் செய்ய முடியாது.

அதேபோன்று காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் நீதி அமைச்சின் கீழ் இயங்குகின்றது. அவ்வாறிருக்கையில் அந்த அலுவலகத்தால் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உரியவாறு இயங்குவதற்கு அதற்குரிய சுதந்திரமும், வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு அரசால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது சற்றும் நம்பிக்கை இருக்கவில்லை. அவர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு நிலவிய போதிலும், எம்மால் இயலுமானளவுக்கு நாம் பல்வேறு விடயங்களைச் செய்தோம்.

இந்த விவகாரத்துக்கு சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொரு விடயமாகும். எனவே, நாம் உள்ளகப் பொறிமுறையை மேலும் பலப்படுத்தவேண்டும்.

அதுமாத்திரமன்றி இவ்வாறான வலிந்து காணாமல் ஆக்கப்படல் சம்பவங்கள் உண்மையில் இடம்பெற்றனவா என்ற கேள்வி தெற்கில் வாழும் பலருக்கு உண்டு. எனவே, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றன என்ற உண்மையை நாம் எவ்வாறு தெற்கு மக்களுக்குப் புரியவைக்கப் போகின்றோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்த விடயத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் நிலவும் இடைவெளியை எவ்வாறு சீரமைக்கப் போகின்றோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுமாத்திரமன்றி இவ்விடயம் சார்ந்து அரச கட்டமைப்பை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் எனக் கலந்துரையாடவேண்டும்.”

– என்றார்.







# இலங்கையில் விளையாட்டுக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்குக

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பான 2025 வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பயன்பாடு குறித்த மீளாய்வு மற்றும் 2026 ஆம் ஆண்டு தொடர்பான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதில், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் உள்ள 8 நிறுவனங்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அது தொடர்பான திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டது.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை உட்பட அனைத்துத் துறைகளின் முன்னேற்றத்துக்காக முறையான வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாததே இதுவரை காணப்பட்ட பிரச்சினை என்றும், கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவை முறையாக குறித்த திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது தொடர்பில் திருப்தியடைய முடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்த நிதி ஒதுக்கீடுகளை உரிய நிதியாண்டுக்குள் முறையாக நிறைவு செய்து மக்களுக்கு நன்மைகளை வழங்குவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் விளையாட்டு கலாச்சாரதை உருவாக்குதல், விளையாட்டுடன் தொடர்புள்ள உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், சர்வதேச அளவில் திறமையான வீரர்களை அடையாளம் காணும் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் வீரர்களை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தினார்.

இதன்போது விளையாட்டுக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி, விளையாட்டுக்களை ஊக்குவிப்பதில் விளையாட்டு சங்கங்களின் அதிகபட்ச பங்களிப்பைப் பெறவும், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அறிவுறுத்தினார்.

இந்த நோக்கத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்வது விளையாட்டு வளர்ச்சிக்கு மட்டுமன்றி, நாட்டின் ஆரோக்கியம், சமூக நலன், குற்றங்களைக் குறைத்தல், போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்டல், கூட்டு முயற்சியை உருவாக்குதல் மற்றும் துடிப்பான தொழில் படையை உருவாக்குதல் போன்ற பல நோக்கங்களை ஒரே நேரத்தில் அடையும் முதலீடாகும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

விளையாட்டுத் துறையில் ஆற்றல் மட்டும் போதாது என்றும், இந்த யுகத்தில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பம் மிக முக்கியமான காரணிகளாகும் என்றும், எனவே, வீரர்களுக்குத் தேவையான வாய்ப்புகளை வழங்குவது விளையாட்டு அமைச்சின் முன்னுரிமைப் பணியாகும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சுகததாஸ விளையாட்டரங்கு மற்றும் கிளிநொச்சி மற்றும் மன்னார் உள்ளிட்ட நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் விளையாட்டு அரங்குகளின் புதுப்பித்தல் மற்றும் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

விளையாட்டு தொடர்பான உள்கட்டமைப்பு மேம்பாட்டில் விசேட கட்டுமானங்களுக்கு நிபுணத்துவ அறிவுள்ளவர்களை பணியமர்த்துதல், இந்த நோக்கத்துக்காக அரச தரப்பில் ஒரு ஆலோசனை நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் சர்வதேச அளவிலான ஆலோசனை சேவைகளைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்தும் ஆராயப்பட்டது.

பாடசாலை விளையாட்டு அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதற்காகத் தேவையான நிதியை ஒதுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

மேற்படி அனைத்து விடயங்களையும் கருத்தில்கொண்டு, விளையாட்டு மேம்பாட்டுக்கான புதிய விரிவான திட்டத்தை விரைவில் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அண்மையில் நடைபெற்ற 2025 தேசிய இளைஞர் மாநாட்டில் பங்கேற்ற இளைஞர்களின் பங்கேற்புடன் இளைஞர் விவகார அமைச்சால் செயற்படுத்தப்படவுள்ள எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்களான எரங்க குணசேகர, சுகத் திலகரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரஸல் அபொன்சு, கபில ஜனக பண்டார மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.






# சமூகப் பிறழ்வுகளுக்கு இனி இடமில்லை

## பச்சிலைப்பள்ளி பண்பாட்டுப் பெருவிழாவில் ஆளுநர் உரை

“எமது பிரதேசங்களில் சமூகப் பிறழ்வுகள் கடந்த காலங்களில் திட்டமிட்ட ரீதியில் ஊக்குவிக்கப்பட்டன. ஆனால், எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று நான் நம்புகின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அரங்கில் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கலைஞர்களுக்கான விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

ஆளுநர் தனது உரையில்,

“எங்களது தனித்துவமான பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்காக இவ்வாறான விழாக்கள் அவசியமானவை. விருந்தோம்பல், இரங்குதல், முதியோரை மதித்தல் என்பன எங்கள் தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகள். கால ஓட்டத்தில் அதாவது பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியம்தான். அதற்காக நாம் எமது சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களை உள்வாங்கக் கூடாது. நல்லவற்றை எடுத்துக்கொள்வோம்.

எமது இளம் சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கவலையடைகின்றனர். அவர்களை கல்விக்கு மேலதிகமாக இரண்டு வழிகள் ஊடாக மாற்றலாம் என்பது எனது ஆழமான நம்பிக்கை. கலை, விளையாட்டு ஆகியன ஊடாகவே அவர்களை மடைமாற்றம் செய்யலாம். அவர்களுக்கு இந்த இரண்டு செயற்பாட்டிலும் வாய்ப்புக்களை நாங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். சமூகப் பிறழ்வுகளை முறியடித்து நாம் முன்னேற வேண்டும்.

ஒருவரை வாழும் போதே கௌரவிப்பதுதான் பெருமை. நீங்கள் இங்கு மூத்த கலைஞர்களை கௌரவித்திருக்கின்றீர்கள். மிகச் சிறப்பான விடயம். அதேபோல இளம் கலைஞர்களையும் ஊக்குவித்திருக்கின்றீர்கள். இதைத் தொடர்ந்து செய்யுங்கள்.

கலைகளை வளர்ப்பதற்கு நீங்கள் எடுக்கும் ஆரோக்கியமான நகர்வுகளுக்கு எமது ஆதரவு எப்போதும் இருக்கும்.”

– என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச நீதி விசாரணை முறைமை இருக்க வேண்டும் என்று தமிழர் தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இப்போது ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் வாதத்தை அடுத்து, செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேச நிபுணத்துவ சேவையை பெறுவது குறித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் பரிசீலிக்கின்றது என்ற செய்தியை, மேற்படி யுத்தக் குற்ற விடயங்கள் பற்றிய விசாரணைகளில் சர்வதேச நீதி முறைமைப் பங்களிப்பு அவசியம் என்ற விடயத்துடன் பொருத்திப் பார்த்து சில தரப்புகள் குழம்பி விட்டன என்பதே உண்மை.

தமிழர்கள் வலியுறுத்தும் சர்வதேச நீதிப் பொறிமுறை பங்களிப்பை, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இப்போது பரிசீலிக்கத் தொடங்கி விட்டதாக சில தரப்புகள் தங்களுக்குள் கருதிக் கொள்ள தலைப்பட்டுள்ளன.

உண்மையில் தமிழர் தரப்பு வலியுறுத்தும் சர்வதேச நீதித்துறைப் பங்களிப்பு வேறு. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இப்போது பரிசீலனைக்கு எடுத்து இருக்கின்ற விடயம் வேறு.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றவை தொடர்பான விசாரணையில் தமிழர் தரப்பு வலியுறுத்தும் சர்வதேச பங்களிப்பு என்பது, அந்த விசாரணைகளை நடத்துகின்ற நீதியாளர்கள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்கள் தரப்பில் சர்வதேச பங்களிப்பு நேரடியாக இருக்க வேண்டும் என்பதாகும்.

இப்போது யாழ்ப்பாணம் நீதிமன்றம் பரிசீலிக்கத் தீர்மானித்துள்ள விடயம் வேறு.

இலங்கை முழுவதிலும் மனிதப் புதைகுழி போன்ற விடயங்களை ஒட்டிய விவகாரங்களில், மரபணுப் பரிசோதனை கட்டாயம் தேவைப்படுகின்ற சமயங்களில் அதனை சர்வதேச தரப்புகள் மூலம் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது. அத்தகைய தகுதி வாய்ந்த நிபுணத்துவம் சர்வதேச தரப்புக்களிடம்தான் இருக்கின்றன.

இதற்கு முன்னர் – 90 களின் கடைசியில் – செம்மணியில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டு, 15 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்ட சமயம், அவற்றில் இரண்டு எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்கான மரபணு சோதனை முயற்சிக்கு வெளிநாட்டு நிபுணத்துவ உதவியே பெற்றுக் கொள்ளப்பட்டது.

அச்சமயத்தில் அந்த இரண்டு எலும்புக் கூடுகளின் மரபணு சோதனைக்கான மாதிரிகள் முதலிலே ஹைதராபாத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கு செய்ய முடியாத நிலையில் திரும்பி கொழும்புக்கு அவை எடுக்கப்பட்டன.

அதன் பின்னர் அவை கிளஸ்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒரு பேராசிரியரான நிபுணரிடம் அனுப்பி வைக்கப்பட்டன. தற்சமயம் அவர் அங்கிருந்து லங்கஷியர் பல்கலைக்கழகத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்டமையை அடுத்து, அந்த மாதிரிகள் அவரோடு லங்கஷியர் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இப்போது அந்தப் பேராசிரியர் பதவி ஓய்வில் செல்ல முடிவு செய்து இருக்கின்றார் என்றும், அதற்கு முன்னர் அந்த மாதிரிகளை அவற்றை அனுப்பிய இலங்கை நீதிமன்றம் மீண்டும் உரிய சட்ட முறைப்படி பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இப்போது அந்த மாதிரிகளை, அவை உரிய முறைப்படி அடையாளம் காணப்படும் வரை, பிரிட்டன் நீதித்துறையே பொறுப்பேற்று சட்டரீதியாக பேணுவதற்கான நிலைமையை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், இது நீதித்துறை சார்ந்த விவகாரம் என்பதால், இத்தகைய மாதிரிகள் ஒரு தரப்பிடமிருந்து இன்னொரு தரப்பிடம் கைமாறுகின்ற போதும், பின்னர் நீண்ட காலம் ஒரு தரப்பின் வசம் இருக்கின்ற போதும், அந்த மாதிரிகளின் கட்டுக் காவலுக்கு – சட்டரீதியான பொறுப்புக்கு – அந்தத் தரப்புகளே கடப்பாடு உடையவை. அதில் சம்பந்தப்பட்ட தரப்பு அசிரத்தையாக இருந்து விட முடியாது.

அதுவும் ஓரிரு மாதிரிகள் கையளிக்கப்படுவது வேறு. இப்போது 150 க்கு மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமானால் அவற்றிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு உரிய சட்ட முறைப்படி பேணப்பட வேண்டும்.

ஒரே சமயத்தில் 150 க்கு மேற்பட்ட எலும்புக் கூடுகளின் மாதிரிகளை மரபணுப் பரிசோதனைக்காக இலங்கையில் இருந்து வெளிநாட்டு நிபுணத்துவத் தரப்பின் சோதனைக்கு அனுப்புவதாயின் அது மிகச் சிக்கலான விவகாரமாக இருக்கும். ஒவ்வொரு மாதிரிக்குமான தனித்தனி சட்டக் கட்டுக்காவல் பொறுப்பை இவ்வாறு வெவ்வேறு தரப்புகள் கையாண்டு பேணுவது குழப்பத்தை தரும்.

அதனால் சேவை பெறப்பட விரும்புகின்ற சர்வதேச நிபுணத்துவ தரப்பை இங்கு எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்படுகின்ற சமயத்திலேயே பக்கத்தில் பிரசன்னமாகி இருக்கச் செய்து, நேரடியாக விடயங்களைக்கையாண்டு, சோதனைக்குரிய மாதிரிகளை பொறுப்பேற்கச் செய்து, அதன் கட்டுக்காவலையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதுதான் அவசியம் என்று சுமந்திரன் வாதிட்டு இருந்தார்.

அதை அடுத்து அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து, அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனையை முன்வைக்குமாறு சட்ட வைத்திய அதிகாரியை யாழ். நீதிமன்றம் கோரி இருக்கிறது.

அதாவது, செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் மீட்கப்படும் எலும்புக் கூடுகளின் மாதிரிகளை, மரபணுப் பரிசோதனைக்காக வெளிநாட்டில் உள்ள நிபுணத்துவ தரப்புகளுக்கு இங்கிருந்து எடுத்து அனுப்பாமல், அந்தத் தரப்புகளை இங்கு கூட்டி வந்து, செம்மணிப் புதைகுழி அகழ்வு பணியோடு நேரடியாக சம்பந்தப்பட வைத்து, இங்கிருந்தே மாதிரிகளை எடுத்துக்கொண்டு செல்கின்ற பொறுப்பை அந்தத் தரப்பிடம் நேரடியாக ஒப்படைப்பது குறித்து யாழ் நீதிமன்றம் பரிசீலிக்கிறது.

இன்னும் சுருக்கமாகச் சொல்வதானால் – மரபணு சோதனைக்கான மாதிரிகளை இலங்கைத் தரப்பு இங்கிருந்து பெற்று, சோதனைக்கு வெளிநாட்டுக்கு அனுப்பாமல், சோதனை நடத்தும் வெளிநாட்டுத் தரப்பை இங்கு வந்து, இங்கிருந்தே மாதிரிகளைத் தாமே பொறுப்பேற்று பெற்று செல்ல வழி காட்டுவதுதான் இப்போதைய திட்டம்.

ஆக, இத்தகைய விடயங்களில் இலங்கை நீதிமன்றம் வெளிநாட்டு நிபுணத்துவ சேவைகளை நீண்ட பல காலமாகத் தங்கு தடை இன்றிப் பெற்று வருகின்றது. அந்த வெளிநாட்டு நிபுணத்துவ சேவையாளர்கள் நேரடியாக செம்மணி மனிதப் புதைகுழிப் பிரதேசத்திற்கு வந்து, அடையாளம் காண்பதற்காக இந்த எலும்புக் கூட்டுத் தொகுதிகளில் இருந்து எடுக்கப் போகின்ற மாதிரிகளைத் தாமே நேரடியாகக் கையாண்டு எடுத்து, பெற்றுப் பொறுப்பேற்றுச் செல்ல வழி செய்யும் நடவடிக்கைதான், இதில், இப்போது நீதிமன்றப் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்ற விவகாரமாக மாறி இருக்கின்றது.

எனவே, இது – யாழ் நீதிமன்றம் இப்போது பரிசீலிக்கின்ற விடயம் – யுத்தக் குற்ற விடயங்களின் விசாரணைகளில் சர்வதேசப் பங்களிப்பை கோரும் கோரிக்கையை உறுதிப்படுத்தும் அம்சமோ, அடிப்படையோ அல்ல என்பதைத் தரப்புகள் புரிந்து கொள்வது நல்லது.

## கொழும்பில் இந்தியச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகங்களிலும் சுதந்திர தின விழாக்கள் நேற்று நடைபெற்றன.

“விக்சித் பாரத்” (வளர்ந்த இந்தியா) என்ற இலக்கை நோக்கிய அர்ப்பணிப்பை மீள வலியுறுத்தி, பெருமையுடன் இலங்கையிலுள்ள இந்தியப் புலம்பெயர் சமூகம் இந்த நிகழ்வில் பங்கேற்றது.

(மற்றொரு செய்தி 14ஆம் பக்கத்தில்...)

## இந்த அரசாங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில்,

“பிரதமரை மாற்ற வேண்டுமா, இல்லையா என்பதை ஜனாதிபதிதான் முடிவு செய்ய வேண்டும். இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகளுக்கு என்ன அவசரம்?

பிரதமர் பதவியை நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் துஷ்பிரயோகம் செய்யவில்லை. ஜனாதிபதி என் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் கேள்விக்குட்படுத்தவில்லை.

ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தி அரசும் என் மீது அழுத்தங்கள் எதனையும் இதுவரை பிரயோகிக்கவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் வதந்திகளை வெளியிட்டு வருகின்றன. சில ஊடகங்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. அனைத்து ஊடகங்களும் நடுநிலையுடன் செயற்பட வேண்டும். உண்மை நிலைமைகளை ஊடகங்கள்தான் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இது தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு. இந்த அரசுக்குள் குழப்பம் என்று வதந்திகளைப் பரப்பி ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் கனவு காணக்கூடாது. நாட்டு மக்களின் அமோக ஆணையைப் பெற்ற இந்த அரசை எந்தச் சக்தியாலும் அசைக்கவே முடியாது.” – என்றார்.

## பாதாளக் குழுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

“பாதாளக் குழுக்களைச் சேர்ந்த குற்றவாளிகள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று, இங்கு குற்றங்களை வழிநடத்துகின்றனர். தமது சொந்தப் பெயரில் கூட முன்னிலையாகத் துப்பில்லாத அந்தத் தரப்பினருக்கு இதற்கு முன்னர் கிடைக்கப் பெற்று வந்த அரசியல் பாதுகாப்பு தற்போது கிடைப்பதில்லை.

மேற்படி குற்றவாளிகளின் பின்னணியில் கடந்த காலங்களில் அரசியல் மற்றும் அரசியல் பாதுகாப்பு இருந்தது. இது அனைவருக்கும் தெரியும். தற்போது அந்தப் பாதுகாப்பு கிடைப்பதில்லை.

எனினும், இங்குள்ள போதைப் பொருள் வியாபாரிகள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், முப்படைகளில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் சில பொலிஸ் அதிகாரிகளைப் பாதாளக் குழுவினர் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன், இதற்கு முன்னர் அரசியல் பாதுகாப்பை வழங்கிய தரப்பினரை நேரடியாக – முறைமுகமாக அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.?” – என்றார்.

# இந்த வருடம் இதுவரை 44 பேர் சுட்டுக்கொலை!



இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் 82 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் போது 44 பேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## தொ பத்திநாதனின் நூல்கள் ஒரு ஆய்வு:



## தமிழகத்தில் வாழும் ஈழத்து அகதிகள் இலங்கைத் தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் துருப்புச் சீட்டு அல்ல !




**போரின் மறுபக்கம்**
- தன்வரலாறு
- திரு ப. தயாளன.
(ஆசிரியர், எழுத்தாளர்)




**தமிழகத்தின் ஈழ அகதிகள்**
- கட்டுரை
- திரு தனுஜன்
(கலாசார உத்தியோகத்தர்)




**தகிப்பின் வாழ்வு**
- கட்டுரை
- திரு. பெ. கணேசன்
(ஓய்வுநிலை அதிபர், எழுத்தாளர்)




**அந்தரம்**
- நாவல்
- வண சிவஞானம் யோசுவா
(இயக்குனர், காவேரி கலா மன்றம், எழுத்தாளர்)

**காலம் :**
**9:30 am @**
**17th August 25**

**லிற்றில் எய்ட் மண்டபம், கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி !**



# பாலியல் தொந்தரவுகளை தடுத்தல் பயிற்சிநெறி திருகோணமலையில்!

(ஏ.எச்.ஹஸ்பர்)

மகிழ்ச்சியான குடும்பத்திற்கான நேர்முக சிந்தனையை உருவாக்குதல் மற்றும் தகவல் தொடர்பு மூலம் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறலைத் தடுத்தல் தொடர்பான பயிற்சி நெறி.

மகிழ்ச்சியான குடும்பத்திற்கான நேர்முக சிந்தனையினை உருவாக்குதல் மற்றும் தகவல் தொடர்பு மூலம் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறலைத் தடுத்தல் தொடர்பான பயிற்சிநெறி நேற்றும் முன்தினமும் (14 மற்றும் 15 ஆம் திகதிகளில்) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்தகுமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் வைத்தியர் காமினி சமரவிக்கிரம வளவாளராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மகளிர் விவகார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து இச்செயலமரல்ர்வை முன்னெடுத்தன. இதற்கான நிதி அனுசரணையை குடித்தொகை நடவடிக்கை தொடர்பான ஐ.நா. நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சிநெறியில் மகளிர் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் இனோகா தமயந்தி , பிரதேச சிறுவர் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர்கள், சிறுவர் - பெண்கள் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.









# நுவரெலியா மாநகரில் கட்டாக்காலிகளாக திரிந்த மட்டக்குதிரைகள் மடக்கப்பட்டன





(ஆர்.எவ்.எம்.சுஹைல்)

நுவரெலியா மாநகரில் கட்டக்காலிகளாகச் சுற்றித் திரிந்த மட்டக்குதிரைகளை கடந்த வாரம் மாநகர சபையினர் பிடித்து அவற்றைக் கையகப்படுத்தினர். பாதுகாப்பான இடம் ஒதுக்கி அவற்றைப் பராமரித்தும் வந்தனர்.

அவை பொது ஏலத்தில் விற்கப்படும் எனவும் மாநகரசபை தரப்பில் கூறப்பட்டது.

பின்னர் அவற்றின் உரிமையாளர்கள் மாநகர சபையின் நகர பிதாவைத் தொடர்பு கொண்டு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய நேற்று நிபந்தனை அடிப்படையில் அவை மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இனி வரும் காலங்களில் மட்டஜ் குதிரைகள் வீதியில் சுற்றித் திரிவதைத் தடுக்குமாறும், இவற்றினால் பாதசாரிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள், வாகன சாரதிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் மட்டக் குதிரைகளின் உரிமையாளர்களுக்கு விளக்கப்பட்டது.

இனி அவை வீதிகளில் அலைந்து திரிவது இடம்பெறாமல் இருக்க வேண்டும் என அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து அவை விடுவிக்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வக்கற்ற அரசு!

துப்பாக்கிச் சூடுகள் மற்றும் வன்முறை அதிர்வேட்டுகளால் நாட்டு மக்கள் பீதியோடு இருக்கின்றனர் என்பது உண்மை.

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதிக்குள் மட்டும் 82 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சூட்டு சம்பவங்களில் 44 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 48 பேர் காயமடைந்துள்ளனர்.

தென்னிலங்கையில் ஆழ ஊடுருவிப் போயிருக்கும் பாதாள உலகக் கும்பல்களின் கைவரிசையே இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் என்பது வெள்ளிடைமலை.

வெறும் கைத்துப்பாக்கிகள் மட்டுமல்லாமல், இயந்திரத் துப்பாக்கிகளும் தாராளமாக - பல நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரங்களை தாண்டிய எண்ணிக்கையில் - பாதாள உலகக் குழுக்களின் கைகளில் இருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கையில் இனவாத யுத்தத்தின் முடிவில் பெருந்தொகை ஆயுதங்கள் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் கும்பல்களின் கைகளில்தான் சிக்கியுள்ளன என்று கருதப்படுகின்றது.

இந்தப் பாதாள உலகம் குழுக்களும் போதைபொருள் கும்பல்களின் தலைமைப் பீடங்களும் தென்னிலங்கையை மையமாக வைத்துத்தான் இயங்கி வருகின்றன. அதனால்தான் இந்தத் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் இப்போது தென்னிலங்கையில் கொடி கட்டிப் பறக்கின்றது.

நாடு உடனடியாக எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் இந்தப் பாதாள உலகக் கும்பல்களிடமிருந்தும் போதைப் பொருள் வர்த்தக சாம்ராஜ்யத்திடம் இருந்தும்தான் வருகின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இலங்கையின் பாதுகாப்புத் துறையினரும் பொலிஸாரும் எதிர்கொள்ளும் உடனடி சவால் இந்த இரண்டு தரப்புகளிடமிருந்துதான் - பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் சாம்ராஜ்ய பிரகிருதிகள் ஆகியோரிடம் இருந்துதான் - வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த இரண்டு சட்ட விரோத மாபியா கும்பல்களையும் தன்னுடைய இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டிய கொழும்பு அரசு, அதை விடுத்து தன்னுடைய முப்படைகளையும், பொலிஸ் தரப்பில் கணிசமானோரையும் சிறுபான்மையினரான தமிழர்கள் வசிக்கும் வடக்கு, கிழக்கில் குவித்து, அந்தப் பகுதிகளை ஆக்கிரமிப்பு பிரதேசமாக வைத்திருக்கின்றது.

தான் தென்னிலங்கையில் எதிர்கொள்ளும் மோசமான வன்முறைக் கும்பல்களை அடக்கும் வேலையை விடுத்து, தமிழர்கள் தாயகத்தை அடிமைப்படுத்தும் நடவடிக்கைக்குத் தான் கொழும்பு முன்னுரிமை கொடுக்கின்றது.

தென்னிலங்கையை ஆட்டிப் படைக்கும் பாதாள உலகம் குழுக்களையும் போதைப் பொருள் சாம்ராஜ்யத்தையும் அடக்கவோ, எதிர்கொள்ளவோ முழு மூச்சுடன் செயலாற்றாத கொழும்பு ஆட்சி பீடம், போரில் நலிவுற்றிருக்கும் தமிழர் தரப்பை ஆக்கிரமித்து, அடிமைப் படுத்தி, ஒடுக்குவதில் மட்டும் தீவிரம் காட்டுகிறது.

தமிழர் தாயகத்தில் கட்டுமட்டுல்லாமல் நிறைந்து கிடக்கும் படைப் பிரசன்னம் தென்னிலங்கையின் இந்த முட்டாள்தனமான ஆக்கிரமிப்பு நோக்குக்கு அடையாளம்.

பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தக சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தினால் இலங்கைத் தீவு என்ற நாட்டின் இறைமையே சந்தேகத்துக்குரியதாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் அது குறித்து கவலைப் படாமல், இறைமைக்குச் சவாலாகும் தரப்புக்களை ஆயுத பலம் கொண்டு அடக்க வக்கற்ற கொழும்பு, தன்னுடைய படைகளை தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் ஒரே நோக்கத்திற்காக அங்கு நிலைபெற வைத்து, நாட்டின் இறைமையை கோட்டை விடுகின்றது என்பதே உண்மை.







# மன்னார்ப் போராட்டத்தை ஆதரித்து ஒன்று திரண்ட மன்னார் முஸ்லிம்கள்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் இடம் பெறும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு உள்ளிட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் உறுதியான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து 13 ஆவது நாளாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று மதியம் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் முஸ்லிம் மக்களும் அதில் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்ற ஜும்மா தொழுகை நிறைவடைந்த நிலையில், முஸ்லிம் மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

மன்னார் நகர பிரதான சுற்றுவட்ட பகுதியில் 13 ஆவது நாளாக மக்களினால் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பில் காற்றாலை செயற்திட்டங்களை ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதாக ஜனாதிபதியினால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் உறுதியான முடிவு வரும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என போராட்டகாரர்கள் தெரிவித்துள்ள நிலையில் நேற்றைய தினம் போராட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# வனவளத் திணைக்களத்தால் விவசாயிகள் அச்சநிலையில்!

## மாவட்ட விவசாய சம்மேளனம் குற்றச்சாட்டு!

(கி.வசந்தன்)

வனவளத்திணைக்களத்தின் அண்மைய செயற்பாடுகளால் விவசாயிகள் அச்சநிலையில் இருக்கின்றனர் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ்.பிரான்சிஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வனவளத்திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தாலும் வவுனியாவை பொறுத்தவரை அவ்வாறு எந்தக் காணியும் விடுவிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அத்துடன் நீண்டகாலமாக பராமரிக்கப்படாத காணிகள் இனிமேல் மக்களுக்கு கிடைக்காது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் பொதுமக்கள் காடுகளாக இருக்கும் தமது காணிகளை துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வனவளத. திணைக்களம் அந்தப் பணியைச் செய்யத் தடை போடுகின்றது. அவ்வாறு செய்பவர்களையும் கைது செய்கின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் எவ்வாறு மக்கள் தமது காணிகளை துப்புரவாக்குவது? இதனால் விவசாயிகளும்,மக்களும் அச்சநிலையில் உள்ளனர். இதற்கு ஒரு நீதியான முடிவை அரசு வழங்கவேண்டும். சில காணிகளுக்குள் கிணறுகள் உள்ளன. அவ்வாறான காணிகளையும் புனரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

30 வருடங்களாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பவில்லை. அவர்களது வீடுகளை மூடி காடுகள் வளர்ந்துள்ளன.

அந்த காணிகள் தொடர்பாக கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தி கடிதம் வழங்கினாலும் வனவளத் திணைக்களம் அதனை ஏற்க மறுக்கின்றது.

பலர் காணிகளுக்கான அனுமதிப்பத்திரத்தையும் வைத்துள்ளனர். ஆனால் அது செல்லுபடியாகாது என்று கூறுகின்றனர். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவே இதற்கு அரசாங்கம்நல்லதொரு தீர்வை வழங்கவேண்டும். – எனத் தெரிவித்தார்.

# தனியார் பஸ் உரிமையாளரின் படுகொலைக்கு நீதி கோரி புங்குடுதீவில் நேற்றுப் போராட்டம்




கடந்த ஓகஸ்ட் 10 அன்று தனது வீட்டில் இருந்தவேளை படுகொலை செய்யப்பட்ட தனியார் பஸ் உரிமையாளரான ஐயாத்துரை அற்புதராசாவின்(அகிலனின்) கொலைக்கு நீதிவேண்டியும் கொலையாளிகளை விரைந்து கைது செய்யக் கோரியும் புங்குடுதீவில் அகிலனின் புதவுடலுடன் மக்கள் போராட்டம் நடத்தினர்.

அவரின் பூங்கொடி தீபம் முதலாம் வட்டாரப் பகுதியில் காணப்படும் இல்லத்தில் இறுதிக் கிரியைகளின் பின்னர் நேற்றுக் காலை 10 மணியளவில் சடலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லும் வழியில் புங்குடுதீவு முதலாம் வட்டார பகுதியில் யாழ்ப்பாணம் – குறிகட்டுவான் வீதியில் சடலத்தை சுமந்தபடி கிராம சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இக்கொலைக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் குறிகட்டுவான் தனியார் பஸ் சேவையும் காலை முதல் இடைநிறுத்தப்பட்டிருந்ததமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# திரையுலகில் 50 ஆண்டுகள் நிறைவு ரஜினிக்கு வாழ்த்துக் கூறினார் மோடி!

ரஜினிகாந்த் திரையுலகில் அறிமுகமாகி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு, அவருக்குப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “திரைப்பட உலகில் புகழ்மிக்க 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் ரஜினிகாந்துக்கு வாழ்த்துகள். அவரது பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது, அவரது நடிப்பில் பலவகையான பாத்திரங்கள் தலைமுறைகள் கடந்து மக்கள் மனங்களில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வரும் காலங்களில் அவரது தொடர்ச்சியான வெற்றிக்கும் நல்ல ஆரோக்கியத்திற்கும் வாழ்த்துகிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ரஜினிகாந்த், “உங்கள் அன்பான வாழ்த்துகளுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். நான் நீண்ட காலமாக மிகவும் மதிக்கும் ஒரு தலைவரிடமிருந்து அவற்றைப் பெறுவது மிகப்பெரிய மரியாதை. உங்கள் அன்பான வார்த்தைகளுக்கு நன்றி. ஜெய் ஹிந்த்” என்று தெரிவித்துள்ளார்.

இந்தியத் திரையுலகின் முன்னணி நடிகரான ரஜினிகாந்த் திரையுலகுக்கு அறிமுகமாகி 50 ஆண்டுகள் ஆகிறது. இதனை முன்னிட்டு பல்வேறு அரசியல் பிரமுகர்கள், திரையுலக நண்பர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

முன்னதாக அவர்கள் அனைவருக்கும் ரஜினிகாந்த் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், “அனைவருக்கும் 79 ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துகள். எனது 50 ஆண்டு கால திரையுலகப் பயணத்தை ஒட்டி என்னை மனமார வாழ்த்திய என் நண்பரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, பாரதிய ஜனதா கட்சி தலைவர் நயினார் நாகேந்திரன், நண்பர் அண்ணாமலை, சசிகலா அம்மையார், தினகரன், பிரேமலதா அம்மையார் மற்றும் பல அரசியல் நண்பர்களுக்கும், கமல்ஹாசன், மம்மூட்டி, மோகன்லால், வைரமுத்து, இளையராஜா உள்ளிட்ட அனைத்து திரையுலக நண்பர்களுக்கும் என்னை வாழ வைக்கும் தெய்வங்களான ரசிக பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.



# வெற்று விளம்பர ஆட்சியாளர்கள் தமிழகத்திற்குத் தேவையில்லை!

## எடப்பாடி பழனிசாமி கண்டனம்



மற்றவர்களைப் பார்த்து, செயற்படும் வெற்று விளம்பரம் செய்யும் ஆட்சியாளர்கள் தமிழகத்திற்குத் தேவையில்லை என்று அதிமுக பொதுச்செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நிர்வாகத் திறனற்ற திமுக அரசின் நிதி அமைச்சர், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி அன்று சமர்ப்பித்த 2024- 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், ‘தாயுமானவர்’ என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்து, அதுபற்றிய விவரங்களை விளக்கியுள்ளார்.

இந்த அறிவித்தபடி கல்வி, வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் வழங்குதல் என்ற எந்த வித நன்மைகளையும் வழங்காமல், 2025 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12 ஆம் திகதி, வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு, வீடுகளுக்கே சென்று உலருணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்றும், அத்திட்டத்துக்குத் ‘தாயுமானவர்’ என்றும் பெயர் சூட்டியுள்ளார். ‘சொல்வது ஒன்று செய்வது ஒன்று’ இதுதான் ஸ்டாலினின் திராவிடத் திட்டம்.

ஏற்கெனவே, எனது தலைமையிலான அதிமுக ஆட்சியில், 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9 கோடி ரூபா செலவில் 3,501 ‘நகரும் நியாய விலைக் கடைகள்’ தமிழகம் எங்கும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்படி மலைக் கிராமங்கள், தொலைதூர கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் மற்றும் குறைந்த அளவு குடும்ப அட்டைகள் உள்ள குடியிருப்புகள் என்று தமிழகம் முழுவதும் 37 மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, பொதுமக்களுக்கு உலருணவுப் பொருள்கள், அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கே நேரடியாக எடுத்துச் சென்று வழங்கப்பட்டது. ஏழை, எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து, வெற்று விளம்பரமின்றி, கடமை உணர்வுடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம், அதிமுக திட்டமாகும். இப்படி எங்கள் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல திட்டங்களுக்கு ‘காப்பி பேஸ்ட்’ செய்து, தனது பெயரை அல்லது புதுப் பெயரை சூட்டி அரசுப் பணத்தில் பல கோடி ரூபா செலவில் வெற்று விளம்பரங்கள் மேற்கொள்வதைத் தான் நாங்கள் ‘பெயிலியர் மாடல் ஸ்டாலின் அரசு’ என்று கூறுகிறோம்.

“தாயுமானவர்” என்று அழகிய தமிழில் பேசினால், மக்களுக்கு உங்கள் லட்சணம் தெரியாதா ? இதுவரை, மக்களுக்குத் தொடர்ந்து பலனளிக்கக்கூடிய எந்தவொரு புதிய திட்டத்தையும் இந்த அரசு அறிவிக்கவில்லை. ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த பிறகு, நகரும் உலருணவுக் கடைகளின் நிலை என்னவென்று தெரியவில்லை. 51 மாதங்களாக எந்த புதிய திட்டத்தையும் உருவாக்க முடியாத திமுக அரசு, தேர்தல் நெருங்கியவுடன் தொடர்ந்து அதிமுகவின் திட்டங்களை தூசு தட்டி, புதிய பெயர் வைத்து விளம்பரப்படுத்துகிறது.

பொது விநியோகத் துறையில் 200 கோடி ரூபாவுக்கு மேல் கடன் வைத்து, நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்கும் அவல நிலையில் உள்ள இந்த அரசு, “தாயுமானவர்” என்று அழகிய தமிழில் பேசினால், மக்களுக்கு உங்கள் லட்சணம் தெரியாதா? 2024 – 25 நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளை உள்ளடக்கிய ‘தாயுமானவர்’ திட்டம் வேறா? தற்போது ஸ்டாலின் ஆரம்பித்துள்ள உலருணவுப் பொருள்களை முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் நேரடியாக வழங்கும் இத்திட்டம் வேறா?

2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தமிழக மக்கள் ‘காப்பி பேஸ்ட்’ பெயிலியர் மாடல் திமுக அரசை வீட்டுக்கு அனுப்புவது உறுதி.- என்று கூறியுள்ளார்.

# அரிய பூமிக் கனிமங்களைப் பதுக்குகின்ற வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எச்சரிக்கை!



அரிய பூமி கனிமங்களின் (Rare Earth Minerals) உற்பத்தி மற்றும் செயலாக்கத்தில் சீனா ஆதிக்கம் செலுத்திவருகிறது. இந்தக் கனிமங்கள், மின்னணு, ஆட்டோமொபைல், பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சீன அரசு தற்போது வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த கனிமங்களை இறக்குமதி செய்து பதுக்கி வைப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இது விநியோக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் அபாயத்தை குறைக்கும் நோக்கத்துடனேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

பாரிய அளவில் அரிய பூமி கனிமங்களின் கையிருப்புகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கு எதிராக ஏற்றுமதி கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்திவருகிறது.

ஏற்கெனவே ஏழு வகை அரிய கனிமங்களை ஏற்றுமதி கட்டுப்பாட்டு பட்டியலில் சேர்த்துள்ளது. இது அமெரிக்காவுடனான வர்த்தக மோதலின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது.

சீனாவின் இந்த நடவடிக்கைகள், வெளிநாட்டு நிறுவனங்களை சீனாவுக்குள் தயாரிப்பு மையங்களை அமைக்க தூண்டிவருகிறது.

சில அமெரிக்க நிறுவனங்கள் சீனாவுக்குள் உற்பத்தி மையங்களை மாற்றியுள்ளன. இது சீனாவுக்கு விநியோக சங்கிலியை கட்டுப்படுத்த உதவுகிறது.

சீனாவின் இந்த கொள்கை, உலக அரிய கனிமங்கள் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது.

# ஜோ பைடனின் மகன் மீது ட்ரம்பின் மனைவி வழக்கு!

## நஷ்டஈடாக ஒரு பில்லியன் டொலர்கள் கோரல்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் மீது டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலனியா ட்ரம்ப் வழக்கு தொடர்ந்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜோ பைடனின் மகன் ஹண்டர் பைடன், ட்ரம்பின் மனைவிக்கு எதிராக அவதூறு கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் குறித்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அத்துடன் 1 பில்லியன் டொலர்களை மெலனியா ட்ரம்ப் நஷ்டஈடாக கோரியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பாலியல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய ஜெப்ரி எப்ஸ்டீன் என்பவரே, ட்ரம்புக்கு மெலனியா ட்ரம்ப்பை அறிமுகம் செய்து வைத்தார் என பொய்யான கருத்தை பகிர்ந்துள்ளமையால் குறித்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பாடசாலையில் மதிய உணவை உட்கொண்ட 365 மாணவர்களுக்கு உடல்நலக் குறைவு!

## இந்தோனேஷிய இலவச உணவுத் திட்டத்தில் மிகப் பெரிய சம்பவம்

இந்தோனேஷியாவில் நகரொன்றிலுள்ள பாடசாலையில் மதிய உணவை உட்கொண்ட 365 மாணவர்கள் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோவின் இலவச உணவுத் திட்டத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய சம்பவமாக இது பார்க்கப்படுகின்றது.

மத்திய ஜாவாவின் ஸ்ராகென் பகுதியில் உணவு மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதால், அங்குள்ள இலவச மதிய உணவுத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 28 பில்லியன் அமெரிக்க டொலர் (21 பில்லியன் பவுண்ஸ்) செலவில் செயல்படும் இந்தத் திட்டம், நாட்டில் குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டைத் தடுக்க ஜனாதிபதி தேர்தல் பிரசார வாக்குறுதியின் ஒரு பகுதியாக ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவான மஞ்சள் சாதம், முட்டை பொடிமா, பொரித்த டெம்பே, வெள்ளரிக்காய் மற்றும் பால் அனைத்தும் பிரதான சமையலறையில் தயாரித்து, நகரின் பல பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் அரசு, இதனால் ஏற்பட்ட மருத்துவச் செலவுகளை தானே ஏற்கும் என்று தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் ஜனவரியில் தொடங்கியதிலிருந்து நாடு முழுவதும் 1,000 இற்கும் மேற்பட்டோருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினம்







இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினம் நேற்று கொழும்பில் இந்தியத் தரப்பின் அதிகாரபூர்வ மையமான இந்திய இல்லத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சந்தோஷ் ஜா இந்தியாவின் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்ட பின்னர் அங்கு திரண்டிருந்த அழைப்பாளர்கள் மத்தியில் இந்திய சுதந்திரத்தின் பெருமைகளை எடுத்துரைத்து உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள் :- எஸ்.எம்.சுரேந்திரன்)



# 18ஆம் திகதி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு மட்டு. முதல்வர் சிவம் பாக்கியநாதன் கோரிக்கை

(கனகராசா சரவணன்)

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு – கிழக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு மட்டக்களப்பு மாநகரிலுள்ள வர்தகர்கள் ஆதரவு வழங்கவேண்டும் என மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு மாநகரசபையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மாநகரசபை முதல்வர் இந்த ஹர்தாலுக்கு ஆதரவு வேண்டி கோரிக்கை விடுத்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு – கிழக்கில் முன்னெடுத்துள்ள ஹர்த்தால் போராட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. எனவே அன்றைய தினம் மாநகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடி ஆதரவு வழங்குமாறு கோருகிறேன்.

வடக்கு – கிழக்கில் இராணுவத்தினரின் அடாவடித்தனம் காரணமாக மக்களின் நாளாந்த வாழ்வியல் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அண்மையில் இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு, அவர் உயிர்பறிக்கப்பட்டு, அந்த குடும்பம் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே தமிழர் தாயகத்தில் காரணம் இன்றி இருக்கின்ற இராணுவமுகாங்கள் அகற்றப்படவேண்டும் என பல்வேறுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அவை அகற்றப்படாமல் உள்ளன. எனவே தமிழ் மக்களுக்கான நீதி வேண்டி இந்த இராணுவமுகாங்களை அகற்றி கோரி ஹர்த்தால் இடம்பெறவுள்ளது.

ஆகவே மாநகரத்திலுள்ள கடை வியாபாரிகள் அன்றைய தினம் தங்களது கடைகளை மூடி இந்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு மாநகர முதல்வர் என்ற வகையில் கோரி நிற்கின்றேன். – என்றார்.




# காலத்துக்கும் ஒவ்வாத போராட்டம் கடையடைப்பு என்று சச்சி காட்டம்

## ஹர்த்தால் உள்ளிட்ட போராட்டங்கள் அவசியமற்றவையாம்

தோல்வியில் முடிந்த தமிழ் மக்களது போராட்டத்திலிருந்து மீண்டுவரும் பொருளாதார நகர்வுகளை மீட்டெடுக்கும் இன்றைய காலகட்டத்தில் ஹர்த்தால் உள்ளிட்ட போராட்டங்கள் அவசியமற்றவை என சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தம் (மறவன்புலவு சச்சி) தெரிவித்துள்ளார்.

எதிர்வரும்18ஆம்திகதியன்றுஅழைக்கப்பட்டுள்ள ஹர்த்தாலை சைவர்களும் தமிழ் மக்களும் புறக்கணிக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு அவர் கூறினார். சச்சிதானந்தம் மேலும் கூறுகையில் –

தற்போது அழைப்பு விடுக்கப்பட்ட கடையடைப்பு போராட்டம் என்பது கடைந்தெடுத்த கயவர்கள் விடுத்துள்ள அழைப்பு. இதை சைவர்கள் – குதிப்பாக தமிழர்கள் – புறக்கணிக்க வேண்டும். கடை அடைப்புக்கான தேவை இன்றைய சூழலுக்கு தேவையற்ற ஒன்று. அத்துடன் கடை அடைப்பு என்பது காலத்துக்கும் ஒவ்வாத போராட்டம்.

முல்லைத்தீவில் இளைஞன் இறந்த சம்பவத்துக்கு அது தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு நடந்த சம்பவத்துக்கு காரணம் கஞ்சா குடித்து, போதையில் நீரில் வீழ்ந்து இறந்ததே என மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்நேரம் இராணுவப் பிரசன்னம் என்பது தோல்வி அடைந்த இனம் சந்திக்கும் ஒரு இயல்பன தாக்கம் அல்லது அடக்கு முறைதான்.

மடு மாதாவின் நலன் கருதி போராட்டத்தை பின்நகர்த்திய குறித்த தரப்பினர் நல்லூர் திருவிழாவை குறிவைத்து கடை அடைப்பு என கூறி சுயநல அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதால் நாளாந்தம் உழைத்து வாழும் மக்களின் வாழ்வே பாதிக்கும்.

அந்தவகையில் ஏழை மக்களை பகடைக்காயாக்க முயற்சிக்கும் நரித்தன அரசியலுக்கு இடம்கொடுக்கக்கூடாது.

இந்த கடை அடைப்பு போராட்டத்துக்கு வர்த்தகர்களோ, போக்குவரத்து சார் சங்கங்களோ, பொது அமைப்புகளோ எதுவானாலும் ஒத்துழைப்பு வழங்க கூடாது.

தோல்வியில் முடிந்த போராட்டத்திலிருந்தி மீண்டுவரும் பொருளாதார நகர்வுகளை மீட்டெடுக்கும் காலத்தில் இந்த போராட்டங்கள் அவசியமற்றவை. – எனவும் அவர் தெரிவித்தார்.

# வவுனியா வடக்கு நெடுங்கேணி வர்த்தகர் சங்கத்தினரும் ஆதரவு

வவுனியா வடக்கு – நெடுங்கேணி வர்த்தகர் சங்கத்தினருடன் வவுனியா வடக்கு பிரதேசசபை தவிசாளர் திருநாவுக்கரசு கிருஷ்ணவேணி மற்றும் வவுனியா மாநகர முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன் ஆகியோர் நேற்று கலந்துரையாடியதன் அடிப்படையில், எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள கடையடைப்புக்கு தாங்களும் பூரண ஆதரவு நல்குகின்றனர் என்று தெரிவித்தனர் என விடயமறிந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

# தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு தெரிவிப்பு

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இளைஞனுக்கு நீதி கோரியும், வடக்கு கிழக்கில் அதிகரித்து காணப்படும் இராணுவ பிரசன்னத்தை முற்றாக நீக்ககோரியும் விடுக்ககப்பட்ட 18 ஆம் திகதிய பொது முடக்கப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை பூரண ஆதரவை வழங்குகின்றது என அதன் பொதுச் செயலாளர் சந்திரகுமார் ஸ்டீவென்சன் அறிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் இப்போராட்டத்தின் கனதியை கருத்தில் கொண்டு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட தொடர் அநீதிகளை சர்வதேச கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும் இடம்பெறவுள்ள இப்போராட்டத்திற்கு ஆதரவை வழங்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். – என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஹர்த்தாலுக்கு ஆதரவு இல்லை வவுனியா வர்த்தகர் சங்கம் முடிவு

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியால் எதிர்வரும் திங்கள் கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க முடியாது என வவுனியா வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் கே.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வட- கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவ பிரச்சன்னம் மற்றும் முல்லைத்தீவு முத்தையன் கட்டில் இடம்பெற்ற சம்பவங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் திங்கட்கிழமை ஹர்த்தால் ஒன்றை மேற்கொள்வதற்கு இலங்கை தமிழரசு கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தஹர்த்தாலுக்குவவுனியாமாவட்ட வர்த்தகர் சங்கம் தமது ஆதரவை வழங்க வேண்டும் என வர்த்தகர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இரு தினங்களுக்கு முன்பாக நேரடியாகச் சந்தித்துக் ஆதரவை கோரியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக ஆராய்வதற்காக வவுனியா வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகசபை கூடியது. இதன்போது அநேகமான நிர்வாகசபை உறுப்பினர்கள் அன்றையதினம் வியாபார நிலையங்களை திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

# இராணுவப் பிரசன்னத்தை அகற்றுவதற்கு பொது முடக்கத்திற்கு ஆதரவு தாருங்கள்!

## வடக்கு - கிழக்கு மக்களிடம் செந்தில்நாதன் மயூரன் வேண்டுகோள்

வவுனியா, ஓகஸ்ட் 16

எதிர்வரும் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள பொது முடக்கத்திற்கு வடக்கு – கிழக்கு மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

போர் முடிவுற்று 16வருடங்கள் கடந்த போதும் வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. அவர்களின் பிரச்சன்னமும் குறைக்கப்படவில்லை. மாறாகப் பொது மக்களின் காணிகளை கபளீகரம் செய்த அவர்கள் அங்கு நிலையான இராணுவ கட்டுமானங்களை அமைத்தனர்.

அந்தகாலம் தொட்டு தமிழ்மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத்தின் தலையீடனாது பல்வேறு பாதிப்புக்களை மக்கள் மத்தியில் ஏற்ப்படுத்தியிருக்கின்றது. அவ்வாறான ஒரு சம்பவமே கடந்தவாரம் முல்லைத்தீவு முத்தையன்கட்டுப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளது.

தமிழர்தாயக பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி, மக்களின் சுதந்திரமான வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டிய நிலைமையை ஆட்சிக்குவந்த பேரினவாத அரசுகள் சிறிதளவேனும் செய்யவில்லை.

தொடர்ச்சியாக அதிகார வர்க்கமானது தமிழ்மக்களை அடிமை மனோநிலையில் நடாத்துகின்ற இந்த நிலைக்கு வடக்கு கிழக்கு மக்களாகிய நாம் எமது பூரண எதிர்ப்பை காட்டவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.



அந்தவகையில் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் அதிகாரவர்க்கத்தின் எதேச்சாதிகாரப்போக்கிற்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள பொது முடக்கத்திற்கு வடகிழக்கு தமிழ்மக்கள், தங்களது பூரண ஒத்துழைப்பை நல்கி சர்வதேச சமூகத்திற்கும்,அரசுக்கும் எமது நிலைப்பாட்டை உறுதிபட வெளிப்படுத்த வேண்டும். – என்று அந்த அறிக்கையில் உள்ளது.

# ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு என சிறி ரெலோ உதயராசா அறிவிப்பு

நாளை மறுதினம் வடக்குக் கிழக்கில் அனுஷ்டிக்கப்படவிருக்கும் கடையடைப்புக்கு சிறி ரெலோ கட்சி முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிறி ரெலோ செயலாளர் நாயகம் ப.உதயராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் –

வடக்கு கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் அரச அடக்குமுறை மற்றும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எதிரான அநீதிகளை ஆட்சேபித்து அவற்றுக்கு எமது எதிர்ப்பைக் காட்டவும் , வடக்கு – கிழக்கு தமிழரின் பூர்வீக நிலங்களில் எமக்கான உரிமைகளை நாமே பெற்றுக்கொள்ளவும், இந்த அரசிற்கு கடும் கண்டனத்தை தெளிவாகவும் எமது தமிழர்களின் அபிலாசைகளை எடுத்துக்காட்டவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண ஹர்த்தாலுக்கு சிறி தமிழீழ விடுதலை இயக்கமாகிய நாங்கள் முழு ஆதரவையும் வழங்குவதற்கு தயாராக உள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வவுனியா சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் திங்கள் நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

வவுனியா சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் திங்கள் நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கத்தினரை சந்தித்து எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள கடையடைப்புக்கு ஆதரவு கோரி நேற்று மதியம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். தமது அமைப்பினருடன் கலந்துரையாடி இது தொடர்பில் பதிலளிப்பதாக அந்த நேரத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் இன்று மாலை வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கத்தினரால் பொதுவான மக்கள் நலன்சார் விடயம் என்ற வகையில் தாம் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவதாக அறிவிக்கப்பட்டது.



# உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கமும் வவுனியா மாவட்டத்தில் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு

வவுனியா மாவட்ட உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கம் திங்கள் நடைபெறும் கடையடைப்புக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கத்தினரை சந்தித்து எதிர்வரும் 18ஆம் திகதி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள கடையடைப்புக்கு ஆதரவு கோரி நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது கடையடைப்புக்கு தாம் பூரணமான ஆதரவு தருவார்கள் என சங்கத்தினர் உறுதியளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியா மாநகரத் துணை முதல்வர் கார்த்தீபனும் ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவு என அறிவிப்பு

வடக்கு கிழக்கில் தொடர்ந்து நடைபெறும் அரச அடக்குமுறை மற்றும் அதிகரித்த இராணுவ பிரசன்னத்திற்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண ஹர்த்தாலுக்கு முழு ஆதரவையும் வழங்குவதாக வவுனியா மாநகர துணை முதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபன் அறிவித்துள்ளார்.

வவுனியா மாநகர முதல்வரிடம் இருந்தும் இவ்விடயம் தொடர்பான அறிவித்தல் ஒன்று விரைவில் வெளியாகும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



# திங்கள் நடக்கும் ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் அழைப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

காரைதீவு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு நேற்று முன்தினம் பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரனின் தலைமையில் சபை உறுப்பினர்களுடனும் இடம்பெற்றது.

இறைவணக்கத்தை தொடர்ந்து தமிழில் ஒலிபரப்பப்பட்ட தேசிய கீதத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமர்வில் தவிசாளரினால் முல்லைத்தீவு மாவட்டம் கரடியனாறு பொலிஸ் பிரிவு இராணுவத்தினரால் தாக்கப்பட்டு காணாமல் போன நிலையில் முத்தையன்கட்டு குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் கபில்ராஜ்/க்கு மௌன அஞ்சலி ஏற்பாட்டினையும் சபையில் முனனெடுத்து நிகழ்த்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் –

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற சிறுபான்மை தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இவ்வாறான இராணுவத்தினரின் மிலேச்சத்தனமான செயல்களை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த அரசாங்கத்திலே நீதியான தீர்வு வழங்க வேண்டியது உங்களது பொறுப்பு. இவ்வாறான கெடுபிடிகளுக்கு எதிராக எமது தமிழரசு கட்சியினரால் எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் நிகழ்விற்கு இச்சபையில் எம்முடன் இணைந்து பயணிக்கும் கட்சியினரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

காரைதீவின் பொதுமக்கள் சார்பாகவும் கட்சியினரின் முன்னெடுப்பிற்கு அமைவாக ஹர்த்தால் நிகழ்விற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்குவோம். – என்றார்.








# மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் பல லட்சம் பக்தர்கள் திரண்டு பங்கேற்பு!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா திருப்பலி நேற்றுக் காலை 6 .15 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அநுராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபட் அன்றாடி,காலி மறை மாவட்ட ஆயர் றேமன் விக்ரமசிங்க, இரத்தினபுரி மறை மாவட்ட ஆயர் அன்ரன் வைமன் குரூஸ், மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை. மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை அடுத்து திருச் சொரூப பவனியும் தொடர்ந்து பக்தர்களுக்கு திருச்சொரூப ஆசி வழங்கலும் இடம்பெற்றன.

இதன் போது அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதி வணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ, அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அரசியல் பிரமுகர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள் உள்ளடங்கலாக சுமார் பல லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# பக்தியில் திளைத்தார்; பக்குவம் பெற்றார்!

(இன்று ராமகிருஷ்ணர் நினைவுதினம். அதை யொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகுகின்றது)

காவியுடன் வருவாரை பின்தொடர்ந்து செல்வார்
கடவுளைக் கண்டீரா என்றுமே கேட்பார்
சன்யாசி யாவருமே தலைதெறிக்க ஓடுவார்
விட்டுவிடா அவரும் தொடருவார் பின்னே

விடை கிடைக்கா நிலையிலும் விடவேயில்லை
ஓடினார் தேடினார் ஒருபயனும் இல்லை
அப்போது அவருக்கு வழிசொன்னார் ஒருவர்
அதுவெளிச்சம் காட்டியது அவர்மாறி விட்டார்

அம்மனின் முன்னாலே அமர்ந்திருந்தார் ஒருவர்
அவரிடமே இவரும் அடைக்கலம் புகுந்தார்
ஐயத்தைப் போக்க அருகில்வா என்றார்
ஐயமும் பறந்தது அனைத்துமே தெரிந்தது

காட்டினார் ராமகிருஷ்ணர் உணர்ந்தாரே விவேகானந்தர்
குருவுக்குச் சீடன் கொடையாக அமைந்தான்
அருளுள்ளே சென்றது அகவிருள் அகன்றது
சீடனோ வாழ்வில் சிகரத்தைத் தொட்டான்

படிப்பில்லா ராமகிருஷ்ணர் பரமனை உணர்ந்தார்
பற்றற்ற நிலையினிலே பாரினிலே வாழ்ந்தார்
கடவுளைக் கண்டார் கருணையை ஈந்தார்
காமம் என்பதை கருக்கியே விட்டார்

காளியின் மீதே காதல் கொண்டார்
காண்பது யாவையும் காளியாய் கண்டார்
பித்துப் பிடித்து காளியைப் பற்றினார்
பக்தியில் திளைத்தார் பக்குவம் பெற்றார்

மனைவியைக் கூட மாகாளியாய் பார்த்தார்
மனைவியை வாழ்வின் புனிதமாய் நினைத்தார்
சிற்றின்பம் அவரின் சிந்தையில் இல்லை
பேரின்பக் கடலாம் காளியில் கலந்தார்


பக்தியைப் பரப்பினார் பக்குவம் உரைத்தார்
இத்தரை விடிந்திட தத்துவம் ஆகினார்
தன்னலம் கருதா தொண்டினை ஆற்றிட
எண்ணரும் இயக்கம் தோன்றிடச் செய்தார்

நாளும் பொழுதும் நவின்றார் உபதேசம்
தேசம் செழிக்கவே யாவும் அமைந்தது
உபதேசம் அனைத்துமே ஔடதம் ஆனது
உள்ளம் உயர்ந்திட உறுதுணை ஆனது

தன்னலம் கருதா ராம கிருஷ்ணர்
தரணியில் வந்தது பெரு வரமாகும்
கலியுகம் தன்னில் கடவுளைக் கண்டிடும்
பக்தியில் திளைத்தவர் பாதம் பணிவோம்

எத்தனை பள்ளிகள் எத்தனை தொண்டுகள்
தொண்டே வாழ்வின் முக்கிய குறிக்கோள்
பக்தியைத் தொட்டே பலதும் எழுந்தது
இத்தனை வித்தினை இட்டவர் அவரே

சமரச நோக்கில் அமைந்த நல்லியக்கம்
சகலரும் சமமென சத்தியம் உரைத்தது
இனமதம் கடந்து இடரினைத் துடைத்தது
உலகிடை ராம கிரிஷ்ணரின் சிந்தனை





- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

# இன்றைய ராசி பலன்கள் -15.08.2025




நீங்கள் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். வீடு கட்டுதல், புனரமைத்தல் போன்ற பொறுப்புகள் காரணமாக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.

சகபணியாளர்களுடன் விருப்பங்களில் வேறுபாடு காணப்படும். நீங்கள் அதிகப்படியான பணிகள் இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வது நல்லது. இது உறவை பலப்படுத்தும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். இன்று எடுக்கும் பயனுள்ள முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை பெற்றுத் தரும்.

பணியில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் உங்கள் பணிகளை உற்சாகமாகவும் எளிதாகவும் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று இனிமையாக நேரம் கழிப்பீர்கள். உங்கள் துணையுடன் நல்ல உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் கடின உழைபிற்காக ஊக்கத் தொகை பெறுவீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். புத்திசாலித்தனமான போக்கு உங்கள் செயல்களில் வெற்றியை பெற்றுத் தரும். சுதந்திரமான கண்ணோட்டத்தை பரா–மரிப்பதன் காரணமாக நீங்கள் உகந்த முடிவை எடுப்பீர்கள்.

உங்களுக்கு கூடுதல் பணிகள் வழங்கப்படும். அதில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வீர்கள்.

இன்று காதல் விவகாரங்கள் சிறப்பாக இருக்காது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இதனை தவிர்க்க இருவரும் கலந்து பேசிக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் அதிக பிரச்சினைகள் காணப்படாது




பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வதந்திகளை தவிர்க்கவும். இன்று யதார்த்த அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் காண நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். அதிர்ஷ்டத்தை நம்பியிராமல் உங்கள் முயரசிகளில் நம்பிக்கை வையுங்கள். இதன் மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

தேவையற்ற வாக்குவாதம் காரணமாக இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

சம்பாதித்த பணத்தில் பெரும்பான்மையை உங்கள் குடும்பத்துக்காகச் செலவு செய்வீர்கள். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருப்பதால் சேமிக்கும் வாய்ப்பு குறைவு.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று உங்களின் தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சற்று மந்தமான நாளாக இருக்கும். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணியில் சீரான பண்கள் காண நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். தவறான புரிந்துணர்வை தவிர்க்கவும்.

நீங்கள் பணத்தை சரியாக கையாள வில்லையெனில் பணம் இழக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையை சமாளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றுஅதிக பணிகள் காரணமாக பதற்றமும் அதன் காரணமாக கால் வலியும் காணப்படும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி அதில் வெற்றியடைவீர்கள் . நீங்கள் சாதிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அதற்காக உங்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி காண்பீர்கள். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். உங்கள் தகவல் தொடர்பு திறமை மூலம் நீங்கள் பணியில் சாதிப்பீர்கள்.

நீங்கள் இன்று காதலின் இனிமையை உணர்வீர்கள். இன்று உங்கள் காதலை வெளிபடுத்த உகந்த நாள்.

இன்று நிதிநிலையில் எந்தப் பிரச்சினயும் இருக்காது. நீங்கள் பணத்தை சிறப்பாக திறமையுடன் கையாள்வீர்கள்.

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்பட நேரலாம். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்க்கவும்.




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும் நாள். ஆரம்பத்தில் சில தடைகள் இருந்தாலும் முடிவில் சாதகமான பலனைப் பெறுவீர்கள்.

இன்று பணியிடத்தில் நீங்கள் சில மாற்றங்களை சந்திக்க நேரலாம். மாறுபடும் சூழ்நிலைகளுக்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

காதலைப் பொறுத்தவரையில் இன்று முக்கிய முடிவுகள் கண்டிப்பாக எடுக்க வேண்டாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். வரவு செலவு என்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் பொதுவான இலக்குகள் நோக்கி செயல்படுவீர்கள். இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் அறிவார்ந்த முறையில் பணி செய்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இதனால் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் சம்பந்தமான முக்கிய முடிவுகளை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இன்று கூடுதல் சுமைகள் காணப்படும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற்பயிற்சி மூலம் நீங்கள் இதனை தவிர்க்கலாம். இன்று இது மிகவும் தேவை,

# இன்றைய ராசி பலன்கள் -15.08.2025




சில ஆரம்ப கால தடைகளுக்குப் பின் உங்கள் இலக்குகளை பூர்த்தி செய்வீர்கள். இதற்கு சில கூடுதல் முயற்சி தேவைப்படும். இன்றைய நாளின் முடிவில் வெற்றி காண்பீர் கள்.

இடைவிடாத தொடர் முயற்சி மூலம் நீங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் காதலை வெளிப்படுத்துவ தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். காதல் சம் பந்தமான சுப நிகழ்சிகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

உங்கள் வீட்டை புனரமைக்க இன்று நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள். மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கி யம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் அனுகூலமான முடிவுகள் எடுக்க மனதில் தெளிவுடன் இருக்க வேண்டும். இன்று நெருங் கியவர்களுடன் உரையாடுவதில் கூட உங்களிடம் தயக்கம் காணப் படும்.

இன்று அதிக பணிகள் காணப்பட டும். அதிர்ஷ்டம் காணப்படாது. பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்கு வாதங்கள் ஏற்படும். உங்கள் காதலை உங்கள் தந்தை எற்றுக் கொள்ள மாட்டார்.

நிதி நிலையைப் பொறுத்தவரை இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக் கும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




இன்று நீங்கள் வளர்ச்சி காண்பீர் கள். உங்கள் ஆற்றலை நன்கு உணர்ந்து செயல்படுவீர்கள். உங்கள் தகவல் தொடர்பு திறமை யால் நீங்கள் புகழடைவீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி இன்று உங்களிடம் காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் செயல்களின் மூலம் உங்கள் துணையை திருப் திபடுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக் கும். இன்று போதிய அளவு பணம் காணப்ப டும்.

உங்களின் அனுசரணையான மன நிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் செய்யும் செயல்களில் திருப்தி கிடைக்க திட்டமிட்டு செய லாற்ற வேண்டும். இதன் மூலம் பாது காப்பின்மை உணர்வை நீங்கள் சமாளிக் கலாம்.

பணியிடத்தில் உங்கள் மேலதி காரிகளால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். இதனால் சிறிது வருத்தம் காணப் படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண் டும்.

மனக் குழப்பம் காரணமாக காதல் விஷயத்தில் தவ றான முடிவுகளை எடுப்பீர்கள். சூடான வாக்குவாதங்க ளில் ஈடுபடுவீர்கள். இது உறவின் இனிமையை கெடுக் கும்.

இன்று இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

ஆரோக்கியமான உணவை சரியான நேரத்தில் உண்ணவும். இதனால் அஜீரணக் கோளாறை தவிர்க் கலாம்.

# நல்லூர் விசேட உற்சவங்களில் 600 பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலுமாகக் கடமையில்

நல்லூர் ஆலய விசேட உற்சவங்களில் 600 பொலி ஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பொலிஸாரால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஏ.பி.எஸ்.ஜெயமஹா தெரிவித்தார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக இடம் பெற்று வரும் நிலை யில் எதிர்வரும் வாரம் நல்லூர் ஆலயத்தில் விசேட உற் சவங்கள் இடம் பெற உள்ளன. அவற்றுக்காக பெரும் எண்ணிக்கியான்ச் பக்தர்கள் நல்லூர் கந்தன் ஆலயத் திற்கு வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிசிக் கருத் தில் கொண்டும் திருட்டுக்களை தடுக்கும் முகமாகவும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்து விசேட பொலிஸ் அணியினர் நல்லூர் ஆலயப் பாதுகாப்பு என வரவழைக்கப்பட்டுள்ளனர்.

சிவில் மற்றும் சீருடையில் சுமார் 600 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

அத்தோடு தென்பகுதி மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து வரக்கூடிய – திருட்டுடன் தொடர்புடைய – பல்வேறு சந்தேக நபர்களை இனங்காணத் தக்க



பொலிஸ் அணியொன்றும் நல்லூர் ஆலய உற்சவத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

அத்தோடு குறிப்பாக ஏற்கனவே பல திருட்டு சம்பவங்க ளும் தொடர்புடையவர்கள் தொடர்பிலான புகைப்படங்களும் ஆலய நுழைவாயில்களில் காட்சிப்படுத்த வுள்ளன எனவும், அவ்வாறு புகைப்படத்தில் காட்சிப்படுத்தப்பட்டவர்கள் யாராவது ஆலய வளாகத்தில் இனம் காணப்பட்டால் பொதுமக்கள் உடனடியாக பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குவதன் மூலம் உரிய சந்தேக நபர்களை விரைவில் கைது செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸாரினால் பல்வேறுபட்ட வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் பொதுமக்கள் அவற் றிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.